ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருமாலிருஞ்சோலை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருமாலிருஞ்சோலை

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ॥ 1 ॥

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ॥ 2 ॥

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ॥ 3 ॥

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு'ணாய மேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ 4 ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ॥ 5 ॥

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।

ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ **6** ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு'ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம: ।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆

வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆
படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ‖ **1.1.2** ‖

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.3** ‖

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ‖ **1.1.4** ‖

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆

தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ‖ **1.1.5** ‖

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ‖ **1.1.6** ‖

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.7** ‖

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆

பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.9** ॥

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.10** ॥

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆

பல்வகையாலும் பவித்திரனே !⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ‖ **1.1.11** ‖

‡ பல்லாண்டென்று பவித்திரனைப்⋆
பரமேட்டியை⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல்⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார்⋆
நமோ நாராயணாயவென்று⋆
பல்லாண்டும் பரமாத்மனைச்⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## பெரியாழ்வார் திருமொழி – உய்யவுலகு

‡ உன்னையும் ஒக்கலையில் கொண்டு தம் இல் மருவி⋆
உன்னொடு தங்கள் கருத்தாயின செய்துவரும்⋆
கன்னியரும் மகிழக் கண்டவர் கண் குளிரக்⋆
கற்றவர் தெற்றிவரப் பெற்ற எனக்கருளி⋆
மன்னு குறுங்குடியாய் ! வெள்ளறையாய் !⋆
மதிள் சூழ் சோலை மலைக்கரசே ! கண்ணபுரத்தமுதே !⋆
என் அவலம் களைவாய் ! ஆடுக செங்கீரை⋆
ஏழ் உலகும் உடையாய் ! ஆடுக ஆடுகவே ‖ **1.6.8** ‖

## பெரியாழ்வார் திருமொழி – தழைகளும்

சுற்றி நின்றாயர் தழைகள் இடச்⋆
சுருள் பங்கி நேத்திரத்தால் அணிந்து⋆
பற்றி நின்றாயர் கடைத்தலையே⋆
பாடவும் ஆடக் கண்டேன்⋆

அன்றிப் பின் மற்றொருவர்க்கென்னைப் பேசல் ஒட்டேன் ⋆
மாலிருஞ்சோலை எம் மாயற்கல்லால் ⋆
கொற்றவனுக்கிவள் ஆம் என்றெண்ணிக் ⋆
கொடுமின்கள் கொடீராகில் கோழம்பமே ॥ **3.4.5** ॥

## பெரியாழ்வார் திருமொழி – அலம்பாவெருட்டா

‡ அலம்பா வெருட்டாக் ⋆
கொன்று திரியும் அரக்கரை ⋆
குலம் பாழ் படுத்துக் ⋆
குல விளக்காய் நின்ற கோன் மலை ⋆
சிலம்பார்க்க வந்து ⋆
தெய்வ மகளிர்கள் ஆடும் சீர் ⋆
சிலம்பாறு பாயும் ⋆
தென் திருமாலிருஞ்சோலையே ॥ **4.2.1** ॥

வல்லாளன் தோளும் ⋆
வாள் அரக்கன் முடியும் ⋆
தங்கை பொல்லாத மூக்கும் ⋆
போக்குவித்தான் பொருந்தும் மலை ⋆
எல்லா விடத்திலும் எங்கும் பரந்து ⋆
பல்லாண்டொலி ⋆
செல்லா நிற்கும் சீர்த் ⋆
தென் திருமாலிருஞ்சோலையே ॥ **4.2.2** ॥

தக்கார் மிக்கார்களைச் ⋆
சஞ்சலம் செய்யும் சலவரைத் ⋆
தெக்கா நெறியே போக்குவிக்கும் ⋆
செல்வன் பொன்மலை ⋆

எக் காலமும் சென்று ⋆
சேவித்திருக்கும் அடியரை ⋆
அக் கானெறியை மாற்றும் ⋆
தண் மாலிருஞ்சோலையே ‖ **4.2.3** ‖

ஆனாயர் கூடி ⋆
அமைத்த விழவை ⋆
அமரர் தம் கோனார்க்கொழியக் ⋆
கோவர்த்தனத்துச் செய்தான் மலை ⋆
வானாட்டில் நின்று ⋆
மாமலர்க் கற்பகத் தொத்திழி ⋆
தேன் ஆறு பாயும் ⋆
தென் திருமாலிருஞ்சோலையே ‖ **4.2.4** ‖

ஒரு வாரணம் ⋆
பணி கொண்டவன் பொய்கையில் ⋆
கஞ்சன் தன் ஒரு வாரணம் ⋆
உயிர் உண்டவன் சென்றுறையும் மலை ⋆
கரு வாரணம் ⋆
தன் பிடி துறந்தோட ⋆
கடல் வண்ணன் திருவாணை கூறத் திரியும் ⋆
தண் மாலிருஞ்சோலையே ‖ **4.2.5** ‖

ஏவிற்றுச் செய்வான் ⋆
ஏன்றெதிர்ந்து வந்த மல்லரை ⋆
சாவத் தகர்த்த ⋆
சாந்தணி தோள் சதுரன் மலை ⋆
ஆவத் தனம் என்று ⋆

அமரர்களும் நன் முனிவரும் ⋆
சேவித்திருக்கும் ⋆
தென் திருமாலிருஞ்சோலையே ॥ **4.2.6** ॥

மன்னர் மறுக ⋆
மைத்துனன்மார்க்கொரு தேரின்மேல் ⋆
முன் அங்கு நின்று ⋆
மோழை எழுவித்தவன் மலை ⋆
கொன்னவில் கூர்வேற் கோன் ⋆
நெடுமாறந் தென் கூடற் கோன் ⋆
தென்னன் கொண்டாடும் ⋆
தென் திருமாலிருஞ்சோலையே ॥ **4.2.7** ॥

குறுகாத மன்னரைக் ⋆
கூடு கலக்கி ⋆
வெங்கானிடைச் சிறுகால் நெறியே போக்குவிக்கும் ⋆
செல்வன் பொன் மலை ⋆
அறுகால் வரி வண்டுகள் ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆
சிறுகாலைப் பாடும் ⋆
தென் திருமாலிருஞ்சோலையே ॥ **4.2.8** ॥

சிந்தப் புடைத்துச் ⋆
செங்குருதி கொண்டு ⋆
பூதங்கள் அந்திப் பலி கொடுத்து ⋆
ஆவத்தனம் செய் அப்பன் மலை ⋆
இந்திர கோபங்கள் ⋆
எம்பெருமான் கனி வாய் ஒப்பான் ⋆

சிந்தும் புறவில் ⋆
தென் திருமாலிருஞ்சோலையே ॥ **4.2.9** ॥

எட்டுத்திசையும் ⋆
எண் இறந்த பெருந் தேவிமார் ⋆
விட்டு விளங்க ⋆
வீற்றிருந்த விமலன் மலை ⋆
பட்டிப் பிடிகள் ⋆
பகடுரிஞ்சிச் சென்று ⋆
மாலைவாய்த் தெட்டித் திளைக்கும் ⋆
தென் திருமாலிருஞ்சோலையே ॥ **4.2.10** ॥

‡ மருதப் பொழில் அணி ⋆
மாலிருஞ்சோலை மலை தன்னை ⋆
கருதி உறைகின்ற ⋆
கார்க்கடல் வண்ணன் அம்மான் தன்னை ⋆
விரதம் கொண்டேத்தும் ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் சொல் ⋆
கருதி உரைப்பவர் ⋆
கண்ணன் கழலிணை காண்பார்களே ॥ **4.2.11** ॥

## பெரியாழ்வார் திருமொழி – உருப்பிணிநங்கை

‡ உருப்பிணி நங்கை தன்னை மீட்பான் ⋆
தொடர்ந்தோடிச் சென்ற ⋆
உருப்பனை ஓட்டிக் கொண்டிட்டு ⋆
உறைத்திட்ட உறைப்பன் மலை ⋆
பொருப்பிடைக் கொன்றை நின்று ⋆
முறி யாழியும் காசும் கொண்டு ⋆

விருப்பொடு பொன் வழங்கும் ⋆
வியன் மாலிருஞ்சோலை அதே ॥ **4.3.1** ॥

கஞ்சனும் காளியனும் ⋆
களிறும் மருதும் எருதும் ⋆
வஞ்சனையில் மடிய ⋆
வளர்ந்த மணிவண்ணன் மலை ⋆
நஞ்சுமிழ் நாகம் எழுந்தணவி ⋆
நளிர் மா மதியை ⋆
செஞ்சுடர் நா வளைக்கும் ⋆
திருமாலிருஞ்சோலை அதே ॥ **4.3.2** ॥

மன்னு நரகன் தன்னைச் ⋆
சூழ் போகி வளைத்தெறிந்து ⋆
கன்னி மகளிர் தம்மைக் ⋆
கவர்ந்த கடல் வண்ணன் மலை ⋆
புன்னை செருந்தியொடு ⋆
புன வேங்கையும் கோங்கும் நின்று ⋆
பொன் அரி மாலைகள் சூழ் ⋆
பொழில் மாலிருஞ்சோலை அதே ॥ **4.3.3** ॥

மாவலி தன்னுடைய ⋆
மகன் வாணன் மகள் இருந்த ⋆
காவலைக் கட்டழித்த ⋆
தனிக் காளை கருதும் மலை ⋆
கோவலர் கோவிந்தனைக் ⋆
குற மாதர்கள் பண் குறிஞ்சிப் ⋆

பா ஒலி பாடி நடம் பயில் ⋆
மாலிருஞ்சோலை அதே ॥ **4.3.4** ॥

‡ பல பல நாழம் சொல்லிப் ⋆
பழித்த சிசுபாலன் தன்னை ⋆
அலவலைமை தவிர்த்த ⋆
அழகன் அலங்காரன் மலை ⋆
குல மலை கோல மலை ⋆
குளிர் மா மலை கொற்ற மலை ⋆
நில மலை நீண்ட மலை ⋆
திருமாலிருஞ்சோலை அதே ॥ **4.3.5** ॥

பாண்டவர் தம்முடைய ⋆
பாஞ்சாலி மறுக்கம் எல்லாம் ⋆
ஆண்டங்கு நூற்றுவர் தம் ⋆
பெண்டிர் மேல் வைத்த அப்பன் மலை ⋆
பாண் தகு வண்டினங்கள் ⋆
பண்கள் பாடி மதுப் பருகத் ⋆
தோண்டல் உடைய மலை ⋆
தொல்லை மாலிருஞ்சோலை அதே ॥ **4.3.6** ॥

கனங்குழையாள் பொருட்டாக் ⋆
கணை பாரித்து ⋆
அரக்கர் தங்கள் இனம் கழுவேற்றுவித்த ⋆
எழில் தோள் எம் இராமன் மலை ⋆
கனம் கொழி தெள் அருவி ⋆
வந்து சூழ்ந்தகல் ஞாலம் எல்லாம் ⋆

இனம் குழுவாடும் மலை ⋆
எழில் மாலிருஞ்சோலை அதே ॥ **4.3.7** ॥

எரி சிதறும் சரத்தால் ⋆
இலங்கையினை ⋆
தன்னுடைய வரி சிலை வாயில் பெய்து ⋆
வாய்க் கோட்டம் தவிர்த்துகந்த ⋆
அரையன் அமரும் மலை ⋆
அமரரோடு கோனும் சென்று ⋆
திரிசுடர் சூழும் மலை ⋆
திரு மாலிருஞ்சோலை அதே ॥ **4.3.8** ॥

கோட்டு மண் கொண்டிடந்து ⋆
குடங்கையில் மண் கொண்டளந்து ⋆
மீட்டும் அதுண்டுமிழ்ந்து ⋆
விளையாடும் விமலன் மலை ⋆
ஈட்டிய பல் பொருள்கள் ⋆
எம்பிரானுக்கடியுறை என்று ⋆
ஓட்டரும் தண் சிலம்பாறுடை ⋆
மாலிருஞ்சோலை அதே ॥ **4.3.9** ॥

‡ ஆயிரம் தோள் பரப்பி ⋆
முடி ஆயிரம் மின் இலக ⋆
ஆயிரம் பைந்தலைய ⋆
அனந்த சயனன் ஆளும் மலை ⋆
ஆயிரம் ஆறுகளும் ⋆
சுனைகள் பல ஆயிரமும் ⋆

ஆயிரம் பூம் பொழிலும் உடை ⋆
மாலிருஞ்சோலை அதே ॥ **4.3.10** ॥

‡ மாலிருஞ்சோலை என்னும் ⋆
மலையை உடைய மலையை ⋆
நாலிரு மூர்த்தி தன்னை ⋆
நால் வேதக் கடல் அமுதை ⋆
மேல் இருங்கற்பகத்தை ⋆
வேதாந்த விழுப் பொருளின் ⋆
மேல் இருந்த விளக்கை ⋆
விட்டுசித்தன் விரித்தனனே ॥ **4.3.11** ॥

## பெரியாழ்வார் திருமொழி – துக்கச்சுழலையை

‡ துக்கச் சுழலையைச் சூழ்ந்து கிடந்த ⋆
வலையை அறப் பறித்து ⋆
புக்கினில் புக்குன்னைக் கண்டு கொண்டேன் ⋆
இனிப் போக விடுவதுண்டே ⋆
மக்கள் அறுவரைக் கல்லிடை மோத ⋆
இழந்தவள் தன் வயிற்றில் ⋆
சிக்கென வந்து பிறந்து நின்றாய் ! ⋆
திரு மாலிருஞ்சோலை எந்தாய் ! ॥ **5.3.1** ॥

வளைத்து வைத்தேன் இனிப் போகலொட்டேன் ⋆
உன்தன் இந்திர ஞாலங்களால் ⋆
ஒளித்திடில் நின் திருவாணை கண்டாய் ⋆
நீ ஒருவர்க்கும் மெய்யன் அல்லை ⋆
அளித்தெங்கும் நாடும் நகரமும் ⋆
தம்முடைத் தீவினை தீர்க்கலுற்றுத் ⋆

தெளித்து வலஞ்செய்யும் தீர்த்தம் உடைத் ⋆
திரு மாலிருஞ்சோலை எந்தாய் ! ॥ **5.3.2** ॥

‡ உனக்குப் பணிசெய்திருக்கும் தவம் உடையேன் ⋆
இனிப் போய் ஒருவன் தனக்குப் பணிந்து ⋆
கடைத்தலை நிற்கை ⋆
நின் சாயை அழிவு கண்டாய் ⋆
புனத்தினை கிள்ளிப் புதுவவி காட்டி ⋆
உன் பொன்னடி வாழ்க என்று ⋆
இனக் குறவர் புதியதுண்ணும் ⋆
எழில் மாலிருஞ்சோலை எந்தாய் ! ॥ **5.3.3** ॥

காதம் பலவும் திரிந்துழன்றேற்கு ⋆
அங்கோர் நிழல் இல்லை நீரும் இல்லை ⋆
உன் பாத நிழல் அல்லால் மற்றோர் உயிர்ப்பிடம் ⋆
நான் எங்கும் காண்கின்றிலேன் ⋆
தூது சென்றாய் ! குரு பாண்டவர்க்காய் ⋆
அங்கோர் பொய்ச்சுற்றம் பேசிச் சென்று ⋆
பேதம் செய்தெங்கும் பிணம் படுத்தாய் ! ⋆
திரு மாலிருஞ்சோலை எந்தாய் ! ॥ **5.3.4** ॥

காலும் எழா கண்ண நீரும் நில்லா ⋆
உடல் சோர்ந்து நடுங்கி ⋆
குரல் மேலும் எழா மயிர்க் கூச்சும் அறா ⋆
என தோள்களும் வீழ்வொழியா ⋆
மால் உகளா நிற்கும் என் மனனே ! ⋆
உன்னை வாழத் தலைப் பெய்திட்டேன் ⋆

சேல் உகளா நிற்கும் நீள்சுனை சூழ் ⋆
திரு மாலிருஞ்சோலை எந்தாய் ! ॥ **5.3.5** ॥

எருத்துக் கொடி உடையானும் ⋆
பிரமனும் இந்திரனும் ⋆
மற்றும் ஒருத்தரும் இப் பிறவி என்னும் நோய்க்கு ⋆
மருந்தறிவாரும் இல்லை ⋆
மருத்துவனாய் நின்ற மா மணிவண்ணா ! ⋆
மறு பிறவி தவிரத் திருத்தி ⋆
உன் கோயில் கடைப் புகப் பெய் ⋆
திரு மாலிருஞ்சோலை எந்தாய் ! ॥ **5.3.6** ॥

அக்கரை என்னும் அனத்தக் கடலுள் அழுந்தி ⋆
உன் பேர் அருளால் ⋆
இக்கரை ஏறி இளைத் திருந்தேனை ⋆
அஞ்சேல் என்று கை கவியாய் ⋆
சக்கரமும் தடக்கைகளும் ⋆
கண்களும் பீதக ஆடையொடும் ⋆
செக்கர் நிறத்துச் சிவப்புடையாய் ! ⋆
திரு மாலிருஞ்சோலை எந்தாய் ! ॥ **5.3.7** ॥

எத்தனை காலமும் எத்தனை ஊழியும் ⋆
இன்றொடு நாளை என்றே ⋆
இத்தனை காலமும் போய்க் கிறிப் பட்டேன் ⋆
இனி உன்னைப் போகலொட்டேன் ⋆
மைத்துனன் மார்களை வாழ்வித்து ⋆
மாற்றலர் நூற்றுவரைக் கெடுத்தாய் ! ⋆

சித்தம் நின் பாலதறிதி அன்றே ⋆
திரு மாலிருஞ்சோலை எந்தாய் ! ‖ **5.3.8** ‖

அன்று வயிற்றில் கிடந்திருந்தே ⋆
அடிமை செய்யல் உற்றிருப்பன் ⋆
இன்று வந்திங்குன்னைக் கண்டு கொண்டேன் ⋆
இனிப் போக விடுவதுண்டே ⋆
சென்றங்கு வாணனை ஆயிரந்தோளும் ⋆
திருச் சக்கரம் அதனால் ⋆
தென்றித் திசை திசை வீழச் செற்றாய் ! ⋆
திரு மாலிருஞ்சோலை எந்தாய் ! ‖ **5.3.9** ‖

‡ சென்றுலகம் குடைந்தாடும் சுனைத் ⋆
திரு மாலிருஞ்சோலை தன்னுள் நின்ற பிரான் ⋆
அடிமேல் அடிமைத் திறம் ⋆
நேர் பட விண்ணப்பஞ்செய் ⋆
பொன் திகழ் மாடம் பொலிந்து தோன்றும் ⋆
புதுவைக் கோன் விட்டுசித்தன் ⋆
ஒன்றினோடொன்பதும் பாட வல்லார் ⋆
உலகம் அளந்தான் தமரே ‖ **5.3.10** ‖

## நாச்சியார் திருமொழி – தெள்ளியார் பலர்

‡ தெள்ளியார் ⋆
பலர் கை தொழும் தேவனார் ⋆
வள்ளல் ⋆
மாலிருஞ்சோலை மணாளனார் ⋆
பள்ளி கொள்ளும் இடத்து ⋆
அடி கொட்டிடக் ⋆

கொள்ளு மாகில் ⋆
நீ கூடிடு கூடலே ! ‖ **4.1** ‖

### நாச்சியார் திருமொழி – சிந்துரச் செம்பொடி

‡ சிந்துரச் செம் பொடிப் போல் ⋆
திருமாலிருஞ்சோலை எங்கும் ⋆
இந்திர கோபங்களே ⋆
எழுந்தும் பரந்திட்டனவால் ⋆
மந்தரம் நாட்டி அன்று ⋆
மதுரக் கொழுஞ்சாறு கொண்ட ⋆
சுந்தரத் தோளுடையான் ⋆
சுழலையில் நின்றுய்துங்கொலோ ! ‖ **9.1** ‖

போர்க்களிறு பொரும் ⋆
மாலிருஞ்சோலை அம் பூம் புறவில் ⋆
தார்க் கொடி முல்லைகளும் ⋆
தவள நகை காட்டுகின்ற ⋆
கார்க்கொள் படாக்கள் நின்று ⋆
கழறிச் சிரிக்கத் தரியேன் ⋆
ஆர்க்கிடுகோ தோழீ ! ⋆
அவன் தார் செய்த பூசலையே ‖ **9.2** ‖

கருவிளை ஒண்மலர்காள் ! ⋆
காயா மலர்காள் ⋆
திருமால் உருவொளி காட்டுகின்றீர் ⋆
எனக்குய் வழக்கொன்றுரையீர் ⋆
திரு விளையாடு திண் தோள் ⋆
திருமாலிருஞ்சோலை நம்பி ⋆

வரிவளை இல் புகுந்து ⋆
வந்தி பற்றும் வழக்குளதே ‖ **9.3** ‖

பைம் பொழில் வாழ் குயில்காள் ! மயில்காள் ! ⋆
ஒண் கருவிளைகாள் ⋆
வம்பக் களங்கனிகாள் ! ⋆
வண்ணப் பூவை நறு மலர்காள் ⋆
ஐம் பெரும் பாதகர்காள் ! ⋆
அணி மாலிருஞ்சோலை நின்ற ⋆
எம் பெருமானுடைய நிறம் ⋆
உங்களுக்கென் செய்வதே ‖ **9.4** ‖

துங்க மலர்ப் பொழில் சூழ் ⋆
திருமாலிருஞ்சோலை நின்ற ⋆
செங்கண் கரு முகிலின் ⋆
திரு உருப் போல் ⋆
மலர் மேல் தொங்கிய வண்டினங்காள் ! ⋆
தொகு பூஞ்சுனைகாள் ! ⋆
சுனையில் தங்கு செந்தாமரைகாள் ! ⋆
எனக்கோர் சரண் சாற்றுமினே ‖ **9.5** ‖

‡ நாறு நறும் பொழில் ⋆
மாலிருஞ்சோலை நம்பிக்கு ⋆
நான் நூறு தடாவில் வெண்ணெய் ⋆
வாய் நேர்ந்து பராவி வைத்தேன் ⋆
நூறு தடா நிறைந்த ⋆
அக்கார அடிசில் சொன்னேன் ⋆

ஏறு திரு உடையான் ⋆
இன்று வந்திவை கொள்ளுங்கொலோ ! ‖ **9.6** ‖

இன்று வந்தித்தனையும் ⋆
அமுது செய்திடப் பெறில் ⋆
நான் ஒன்று நூறாயிரமாக் கொடுத்து ⋆
பின்னும் ஆளும் செய்வன் ⋆
தென்றல் மணங்கமழும் ⋆
திருமாலிருஞ்சோலை தன்னுள் நின்ற பிரான் ⋆
அடியேன் மனத்தே வந்து ⋆
நேர் படிலே ‖ **9.7** ‖

காலை எழுந்திருந்து ⋆
கரிய குருவிக் கணங்கள் ⋆
மாலின் வரவு சொல்லி ⋆
மருள் பாடுதல் மெய்ம்மை கொலோ ⋆
சோலை மலைப் பெருமான் ⋆
துவராபதி எம் பெருமான் ⋆
ஆலின் இலைப் பெருமான் ⋆
அவன் வார்த்தை உரைக்கின்றதே ‖ **9.8** ‖

கோங்கலரும் பொழில் ⋆
மாலிருஞ்சோலையில் கொன்றைகள் மேல் ⋆
தூங்கு பொன் மாலைகளோடு ⋆
உடனாய் நின்று தூங்குகின்றேன் ⋆
பூங்கொள் திருமுகத்து ⋆
மடுத்தூதிய சங்கொலியும் ⋆

சார்ங்கவில் நாண் ஒலியும் ⋆
தலைப் பெய்வதெஞ்ஞான்று கொலோ ! ॥ **9.9** ॥

‡ சந்தொடு கார் அகிலும் சுமந்து ⋆
தடங்கள் பொருது ⋆
வந்திழியும் சிலம்பாறுடை ⋆
மாலிருஞ்சோலை நின்ற சுந்தரனை ⋆
சுரும்பார் குழல் ⋆
கோதை தொகுத்துரைத்த ⋆
செந் தமிழ் பத்தும் வல்லார் ⋆
திருமால் அடி சேர்வர்களே ॥ **9.10** ॥

## பெரிய திருமொழி – கொங்கலர்ந்த

வண் கையான் அவுணர்க்கு நாயகன் ⋆
வேள்வியில் சென்று மாணியாய் ⋆
மண் கையால் இரந்தான் ⋆
மராமரம் ஏழும் எய்த வலத்தினான் ⋆
எண் கையான் இமயத்துள்ளான் ⋆
இருஞ்சோலை மேவிய எம் பிரான் ⋆
திண் கைம்மா துயர் தீர்த்தவன் ⋆
திருவேங்கடம் அடை நெஞ்சமே ॥ **1.8.5** ॥

## பெரிய திருமொழி – திவளும்

உளம் கனிந்திருக்கும் உன்னையே பிதற்றும் ⋆
உனக்கன்றி எனக்கன்பொன்றிலளால் ⋆
வளங்கனி பொழில் சூழ் மாலிருஞ்சோலை ⋆
மாயனே ! என்று வாய் வெருவும் ⋆

களங்கனி முறுவல் காரிகை பெரிது ⋆
கவலையோடவலம் சேர்ந்திருந்த ⋆
இளங்கனி இவளுக்கென் நினைந்திருந்தாய் ⋆
இடவெந்தை எந்தை பிரானே ॥ **2.7.7** ॥

## பெரிய திருமொழி – நும்மைத் தொழுதோம்

‡ சிந்தை தன்னுள் நீங்காதிருந்த திருவே ! ⋆
மருவினிய மைந்தா ⋆
அந்தண் ஆலி மாலே ! ⋆
சோலை மழ களிறே ! ⋆
நந்தா விளக்கின் சுடரே ! ⋆
நறையூர் நின்ற நம்பீ ⋆
என் எந்தாய் ! இந்தளூராய் ! ⋆
அடியேற்கிறையும் இரங்காயே ! ॥ **4.9.2** ॥

## பெரிய திருமொழி – சினவில்

எட்டனைப் பொழுதாகிலும் ⋆
என்றும் என் மனத்தகலாதிருக்கும் புகழ் ⋆
தட்டலர்த்த பொன்னே அலர் கோங்கின் ⋆
தாழ் பொழில் திருமாலிருஞ்சோலை அம் கட்டியை ⋆
கரும்பீன்ற இன் சாற்றைக் ⋆
காதலால் மறை நான்கும் முன் ஓதிய பட்டனை ⋆
பரவைத் துயில் ஏற்றை ⋆
என் பண்பனை அன்றிப் பாடல் செய்யேனே ॥ **7.3.6** ॥

## பெரிய திருமொழி – கள்ளம் மனம்

‡ சேய் ஓங்கு தண் ⋆
திருமாலிருஞ்சோலை மலை உறையும் மாயா ⋆
எனக்குரையாய் இது ⋆
மறை நான்கின் உளாயோ ⋆
தீயோம் புகை மறையோர் ⋆
சிறு புலியூர்ச் சலசயனத்தாயோ ⋆
உனதடியார் மனத்தாயோ ⋆
அறியேனே ‖ **7.9.7** ‖

## பெரிய திருமொழி – பொன்னிவர் மேனி

வேய் இருஞ்சோலை விலங்கல் சூழ்ந்த ⋆
மெய்ய மணாளர் இவ்வையம் எல்லாம் ⋆
தாயின நாயகர் ஆவர் தோழீ ! ⋆
தாமரைக் கண்கள் இருந்தவாறு ⋆
சேய் இருங்குன்றம் திகழ்ந்ததொப்பச் ⋆
செவ்விய ஆகி மலர்ந்த சோதி ⋆
ஆயிரம் தோளொடிலங்கு பூணும் ⋆
அச்சோ ஒருவர் அழகியவா ! ‖ **9.2.3** ‖

மஞ்சுயர் மா மதி தீண்ட நீண்ட ⋆
மாலிருஞ்சோலை மணாளர் வந்து ⋆
என் நெஞ்சுள்ளும் கண்ணுள்ளும் நின்று நீங்கார் ⋆
நீர் மலை யார் கொல் நினைக்க மாட்டேன் ⋆
மஞ்சுயர் பொன் மலை மேல் எழுந்த ⋆
மா முகில் போன்றுளர் வந்து காணீர் ⋆
அஞ்சிறைப் புள்ளும் ஒன்றேறி வந்தார் ⋆
அச்சோ ஒருவர் அழகியவா ! ‖ **9.2.8** ‖

## பெரிய திருமொழி – முந்துற

‡ முந்துற உரைக்கேன் விரைக் குழல் மடவார் ⋆
கலவியை விடு தடுமாறல் ⋆
அந்தரம் ஏழும் அலை கடல் ஏழும் ஆய ⋆
எம் அடிகள் தம் கோயில் ⋆
சந்தொடு மணியும் அணி மயில் தழையும் ⋆
தழுவி வந்தருவிகள் நிரந்து ⋆
வந்திழி சாரல் மாலிருஞ்சோலை ⋆
வணங்குதும் வா ! மட நெஞ்சே ! ‖ **9.8.1** ‖

இண்டையும் புனலும் கொண்டிடை இன்றி ⋆
எழுமினோ தொழுதும் என்று ⋆
இமையோர் அண்டரும் பரவ அரவணைத் துயின்ற ⋆
சுடர் முடிக் கடவுள் தம் கோயில் ⋆
விண்டலர் தூளி வேய் வளர் புறவில் ⋆
விரை மலர்க் குறிஞ்சியின் நறுந் தேன் ⋆
வண்டமர் சாரல் மாலிருஞ்சோலை ⋆
வணங்குதும் வா ! மட நெஞ்சே ! ‖ **9.8.2** ‖

பிணி வளர் ஆக்கை நீங்க நின்றேத்தப் ⋆
பெரு நிலம் அருளின் முன் அருளி ⋆
அணி வளர் குறளாய் அகல் இடம் முழுதும் ⋆
அளந்த எம் அடிகள் தம் கோயில் ⋆
கணி வளர் வேங்கை நெடு நிலம் அதனில் ⋆
குறவர் தம் கவணிடைத் துரந்த ⋆
மணி வளர் சாரல் மாலிருஞ்சோலை ⋆
வணங்குதும் வா ! மட நெஞ்சே ! ‖ **9.8.3** ‖

சூர்மையில் ஆய பேய் முலை சுவைத்துச் ⋆
சுடு சரம் அடு சிலைத் துரந்து ⋆
நீர்மை இலாத தாடகை மாள ⋆
நினைந்தவர் மனம் கொண்ட கோயில் ⋆
கார் மலி வேங்கை கோங்கலர் புறவில் ⋆
கடி மலர்க் குறிஞ்சியின் நறுந் தேன் ⋆
வார் புனல் சூழ் தண் மாலிருஞ்சோலை ⋆
வணங்குதும் வா ! மட நெஞ்சே ! ॥ **9.8.4** ॥

வணங்கல் இல் அரக்கன் செருக்களத்தவிய ⋆
மணி முடி ஒருபதும் புரள ⋆
அணங்கெழுந்தவன் தன் கவந்தம் நின்றாட ⋆
அமர் செய்த அடிகள் தம் கோயில் ⋆
பிணங்கலில் நெடு வேய் நுதி முகம் கிழிப்பப் ⋆
பிரசம் வந்திழி தர ⋆
பெருந் தேன் மணங்கமழ் சாரல் மாலிருஞ்சோலை ⋆
வணங்குதும் வா ! மட நெஞ்சே ! ॥ **9.8.5** ॥

விடங்கலந்தமர்ந்த அரவணைத் துயின்று ⋆
விளங்கனிக்கிளங்கன்று விசிறி ⋆
குடங்கலந்தாடிக் குரவை முன் கோத்த ⋆
கூத்த எம் அடிகள் தம் கோயில் ⋆
தடங்கடல் முகந்து விசும்பிடைப் பிளிறத் ⋆
தடவரைக் களிறென்று முனிந்து ⋆
மடங்கல் நின்றதிரும் மாலிருஞ்சோலை ⋆
வணங்குதும் வா ! மட நெஞ்சே ! ॥ **9.8.6** ॥

தேனுகன் ஆவி போய் உக ⋆
அங்கோர் செழுந் திரள் பனங்கனி உதிர ⋆
தான் உகந்தெறிந்த தடங்கடல் வண்ணர் ⋆
எண்ணி முன் இடம் கொண்ட கோயில் ⋆
வானகச் சோலை மரதகச் சாயல் ⋆
மா மணிக் கல் அதர் நிறைந்து ⋆
மானுகர் சாரல் மாலிருஞ்சோலை ⋆
வணங்குதும் வா ! மட நெஞ்சே ! ‖ **9.8.7** ‖

புதமிகு விசும்பில் புணரி சென்றணவப் ⋆
பொரு கடல் அரவணைத் துயின்று ⋆
பதமிகு பரியின் மிகு சினம் தவிர்த்த ⋆
பனி முகில் வண்ணர் தம் கோயில் ⋆
கதமிகு சினத்த கட தடக் களிற்றின் ⋆
கவுள் வழிக் களி வண்டு பருக ⋆
மதமிகு சாரல் மாலிருஞ்சோலை ⋆
வணங்குதும் வா ! மட நெஞ்சே ! ‖ **9.8.8** ‖

புந்தி இல் சமணர் புத்தர் என்றிவர்கள் ⋆
ஒத்தன பேசவும் உகந்திட்டு ⋆
எந்தை பெம்மானார் இமையவர் தலைவர் ⋆
எண்ணி முன் இடம் கொண்ட கோயில் ⋆
சந்தனப் பொழிலின் தாழ் சினை நீழல் ⋆
தாழ்வரை மகளிர்கள் நாளும் ⋆
மந்திரத்திறைஞ்சும் மாலிருஞ்சோலை ⋆
வணங்குதும் வா ! மட நெஞ்சே ! ‖ **9.8.9** ‖

‡ வண்டமர் சாரல் மாலிருஞ்சோலை ⋆
மா மணி வண்ணரை வணங்கும் ⋆
தொண்டரைப் பரவும் சுடர் ஒளி நெடுவேல் ⋆
சூழ் வயல் ஆலி நன்னாடன் ⋆
கண்டல் நல் வேலி மங்கையர் தலைவன் ⋆
கலியன் வாய் ஒலி செய்த பனுவல் ⋆
கொண்டிவை பாடும் தவம் உடையார்கள் ⋆
ஆள்வர் இக்குரை கடல் உலகே ‖ **9.8.10** ‖

## பெரிய திருமொழி – மூவரில்

‡ மூவரில் முன் முதல்வன் ⋆
முழங்கார் கடலுள் கிடந்து ⋆
பூவலர் உந்தி தன்னுள் ⋆
புவனம் படைத்துண்டுமிழ்ந்த ⋆
தேவர்கள் நாயகனை ⋆
திருமாலிருஞ்சோலை நின்ற ⋆
கோவலர் கோவிந்தனைக் ⋆
கொடியேர் இடை கூடுங்கொலோ ‖ **9.9.1** ‖

‡ புனை வளர் பூம் பொழில் ஆர் ⋆
பொன்னி சூழ் அரங்க நகருள் முனைவனை ⋆
மூவுலகும் படைத்த ⋆
முதல் மூர்த்தி தன்னை ⋆
சினை வளர் பூம் பொழில் சூழ் ⋆
திருமாலிருஞ்சோலை நின்றான் ⋆
கனை கழல் காணுங்கொலோ ⋆
கயற் கண்ணி எம் காரிகையே ‖ **9.9.2** ‖

உண்டுலகேழினையும் ⋆
ஒரு பாலகன் ஆல் இலை மேல் ⋆
கண் துயில் கொண்டுகந்த ⋆
கரு மாணிக்க மா மலையை ⋆
திண் திறல் மாகரி சேர் ⋆
திருமாலிருஞ்சோலை நின்ற ⋆
அண்டர் தம் கோவினை ⋆
இன்று அணுகுங்கொல் என் ஆய் இழையே ‖ **9.9.3** ‖

சிங்கம் அதாய் அவுணன் ⋆
திறல் ஆகம் முன் கீண்டுகந்த ⋆
பங்கய மா மலர்க் கண் ⋆
பரனை எம் பரஞ்சுடரை ⋆
திங்கள் நன் மா முகில் சேர் ⋆
திருமாலிருஞ்சோலை நின்ற ⋆
நங்கள் பிரானை ⋆
இன்று நணுகுங்கொல் என் நன்னுதலே ‖ **9.9.4** ‖

தானவன் வேள்வி தன்னில் ⋆
தனியே குறளாய் நிமிர்ந்து ⋆
வானமும் மண்ணகமும் ⋆
அளந்த திரிவிக்கிரமன் ⋆
தேன் அமர் பூம் பொழில் சூழ் ⋆
திருமாலிருஞ்சோலை நின்ற ⋆
வானவர் கோனை ⋆
இன்று வணங்கித் தொழ வல்லள் கொலோ ‖ **9.9.5** ‖

‡ நேசம் இலாதவர்க்கும் ⋆
நினையாதவர்க்கும் அரியான் ⋆
வாச மலர்ப் பொழில் சூழ் ⋆
வட மா மதுரைப் பிறந்தான் ⋆
தேசம் எல்லாம் வணங்கும் ⋆
திருமாலிருஞ்சோலை நின்ற ⋆
கேசவ நம்பி தன்னைக் ⋆
கெண்டை ஒண் கண்ணி காணுங்கொலோ ॥ **9.9.6** ॥

புள்ளினை வாய் பிளந்து ⋆
பொரு மா கரி கொம்பொசித்து ⋆
கள்ளச் சகடுதைத்த ⋆
கரு மாணிக்க மா மலையை ⋆
தெள் அருவி கொழிக்கும் ⋆
திருமாலிருஞ்சோலை நின்ற ⋆
வள்ளலை வாள் நுதலாள் ⋆
வணங்கித் தொழ வல்லள் கொலோ ॥ **9.9.7** ॥

பார்த்தனுக்கன்றருளிப் ⋆
பாரதத்தொரு தேர் முன் நின்று ⋆
காத்தவன் தன்னை ⋆
விண்ணோர் கரு மாணிக்க மா மலையை ⋆
தீர்த்தனைப் பூம் பொழில் சூழ் ⋆
திருமாலிருஞ்சோலை நின்ற ⋆
மூர்த்தியைக் கை தொழவும் ⋆
முடியுங்கொல் என் மொய் குழற்கே ॥ **9.9.8** ॥

‡ வலம்புரி ஆழியனை ⋆
வரை ஆர் திரள் தோளன் தன்னை ⋆
புலம்புரி நூலவனைப் ⋆
பொழில் வேங்கட வேதியனை ⋆
சிலம்பியல் ஆறுடைய ⋆
திருமாலிருஞ்சோலை நின்ற ⋆
நலந் திகழ் நாரணனை ⋆
நணுகுங்கொல் என் நல் நுதலே ‖ **9.9.9** ‖

‡ தேடற்கரியவனைத் ⋆
திருமாலிருஞ்சோலை நின்ற ⋆
ஆடல் பறவையனை ⋆
அணி ஆய் இழை காணும் என்று ⋆
மாடக் கொடி மதிள் சூழ் ⋆
மங்கையார் கலிகன்றி சொன்ன ⋆
பாடல் பனுவல் பத்தும் ⋆
பயில்வார்க்கில்லை பாவங்களே ‖ **9.9.10** ‖

## பெரிய திருமொழி – ஒருநல் சுற்றம்

பத்தர் ஆவியைப் ⋆
பால் மதியை ⋆
அணித் தொத்தை ⋆
மாலிருஞ்சோலைத் தொழுது போய் ⋆
முத்தினை மணியை ⋆
மணி மாணிக்க வித்தினை ⋆
சென்று விண்ணகர் காண்டுமே ‖ **10.1.8** ‖

## பெரிய திருமொழி – குன்றமெடுத்து

மஞ்சுறு மாலிருஞ்சோலை ⋆
நின்ற மணாளனார் ⋆
நெஞ்சம் நிறை கொண்டு போயினார் ⋆
நினைகின்றிலர் ⋆
வெஞ்சுடர் போய் விடியாமல் ⋆
எவ்விடம் புக்கதோ ⋆
நஞ்சுடலம் துயின்றால் ⋆
நமக்கினி நல்லதே ‖ **11.2.8** ‖

## பெரிய திருமொழி – நீள் நாகம்

‡ தேனொடு வண்டாலும் ⋆
திருமாலிருஞ்சோலை ⋆
தான் இடமாக் கொண்டான் ⋆
தட மலர்க் கண்ணிக்காய் ⋆
ஆன் விடை ஏழ் அன்றடர்த்தாற்கு ⋆
ஆள் ஆனார் அல்லாதார் ⋆
மானிடவர் அல்லர் என்று ⋆
என் மனத்தே வைத்தேனே ‖ **11.7.9** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – திருக்குறுந்தாண்டகம்

பாய் இரும் பரவை தன்னுள் ⋆
பரு வரை திரித்து ⋆
வானோர்க்காய் இருந்தமுதம் கொண்ட ⋆
அப்பனை எம் பிரானை ⋆
வேய் இருஞ்சோலை சூழ்ந்து ⋆
விரி கதிர் இரிய நின்ற ⋆

மாய் இருஞ்சோலை மேய ⋆
மைந்தனை வணங்கினேனே ‖ **3** ‖

## திருவாய்மொழி – கிளரொளி

‡ கிளர் ஒளி இளமை ⋆
கெடுவதன் முன்னம் ⋆
வளர் ஒளி மாயோன் ⋆
மருவிய கோயில் ⋆
வளர் இளம் பொழில் சூழ் ⋆
மாலிருஞ்சோலை ⋆
தளர் விலராகில் ⋆
சார்வது சதிரே ‖ **2.10.1** ‖

சதிர் இள மடவார் ⋆
தாழ்ச்சியை மதியாது ⋆
அதிர் குரல் சங்கத்து ⋆
அழகர் தம் கோயில் ⋆
மதி தவழ் குடுமி ⋆
மாலிருஞ்சோலை ⋆
பதி அது ஏத்தி ⋆
எழுவது பயனே ‖ **2.10.2** ‖

பயன் அல்ல செய்து ⋆
பயன் இல்லை நெஞ்சே ! ⋆
புயல் மழை வண்ணர் ⋆
புரிந்துறை கோயில் ⋆
மயல் மிகு பொழில் சூழ் ⋆
மாலிருஞ்சோலை ⋆

அயல்மலை அடைவது ⋆
அது கருமமே ‖ **2.10.3** ‖

கரும வன் பாசம் ⋆
கழித்துழன்றுய்யவே ⋆
பெருமலை எடுத்தான் ⋆
பீடுறை கோயில் ⋆
வரு மழை தவழும் ⋆
மாலிருஞ்சோலை ⋆
திருமலை அதுவே ⋆
அடைவது திறமே ‖ **2.10.4** ‖

திறம் உடை வலத்தால் ⋆
தீவினை பெருக்காது ⋆
அறம் உயல் ஆழிப் ⋆
படை அவன் கோயில் ⋆
மறுவில் வண் சுனை சூழ் ⋆
மாலிருஞ்சோலை ⋆
புறமலை சாரப் ⋆
போவது கிறியே ‖ **2.10.5** ‖

கிறியென நினைமின் ⋆
கீழ்மை செய்யாதே ⋆
உறியமர் வெண்ணெய் ⋆
உண்டவன் கோயில் ⋆
மறியொடு பிணை சேர் ⋆
மாலிருஞ்சோலை ⋆

நெறி பட அதுவே ⋆
நினைவது நலமே ‖ **2.10.6** ‖

நலம் என நினைமின் ⋆
நரகழுந்தாதே ⋆
நில முனம் இடந்தான் ⋆
நீடுறை கோயில் ⋆
மலம் அறுமதி சேர் ⋆
மாலிருஞ்சோலை ⋆
வல முறை எய்தி ⋆
மருவுதல் வலமே ‖ **2.10.7** ‖

வலம் செய்து வைகல் ⋆
வலங்கழியாதே ⋆
வலம் செய்யும் ⋆
ஆய மாயவன் கோயில் ⋆
வலம் செய்யும் வானோர் ⋆
மாலிருஞ்சோலை ⋆
வலம் செய்து நாளும் ⋆
மருவுதல் வழக்கே ‖ **2.10.8** ‖

வழக்கென நினைமின் ⋆
வல்வினை மூழ்காது ⋆
அழக்கொடி அட்டான் ⋆
அமர் பெருங்கோயில் ⋆
மழக் களிற்றினம் சேர் ⋆
மாலிருஞ்சோலை ⋆

தொழக் கருதுவதே ⋆
துணிவது சூதே ॥ **2.10.9** ॥

சூதென்று களவும் ⋆
சூதும் செய்யாதே ⋆
வேதமுன் விரித்தான் ⋆
விரும்பிய கோயில் ⋆
மாதுறு மயில் சேர் ⋆
மாலிருஞ்சோலை ⋆
போதவிழ் மலையே ⋆
புகுவது பொருளே ॥ **2.10.10** ॥

‡ பொருள் என்றிவ்வுலகம் ⋆
படைத்தவன் புகழ்மேல் ⋆
மருளில் வண் குருகூர் ⋆
வண் சடகோபன் ⋆
தெருள் கொள்ளச் சொன்ன ⋆
ஓர் ஆயிரத்துள் இப்பத்து ⋆
அருளுடையவன் தாள் ⋆
அணைவிக்கும் முடித்தே ॥ **2.10.11** ॥

## திருவாய்மொழி – முடிச்சோதி

‡ முடிச் சோதியாய் ⋆
உனது முகச் சோதி மலர்ந்ததுவோ ⋆
அடிச் சோதி நீ நின்ற ⋆
தாமரையாய் அலர்ந்ததுவோ ⋆
படிச் சோதி ஆடையொடும் ⋆
பல் கலனாய் ⋆

நின் பைம் பொன் கடிச் சோதி கலந்ததுவோ ⋆
திருமாலே ! கட்டுரையே ‖ **3.1.1** ‖

கட்டுரைக்கில் தாமரை ⋆
நின் கண் பாதம் கை ஒவ்வா ⋆
சுட்டுரைத்த நன் பொன் ⋆
உன் திருமேனி ஒளி ஒவ்வாது ⋆
ஒட்டுரைத்திவ்வுலகுன்னைப் ⋆
புகழ்வெல்லாம் பெரும்பாலும் ⋆
பட்டுரையாய்ப் புற்கென்றே ⋆
காட்டுமால் பரஞ்சோதீ ! ‖ **3.1.2** ‖

பரஞ்சோதி ! நீ பரமாய் ⋆
நின் இகழ்ந்து பின் ⋆
மற்றோர் பரஞ்சோதி இன்மையின் ⋆
படி ஓவி நிகழ்கின்ற ⋆
பரஞ்சோதி நின் உள்ளே ⋆
படர் உலகம் படைத்த ⋆
எம் பரஞ்சோதி கோவிந்தா ! ⋆
பண்புரைக்க மாட்டேனே ‖ **3.1.3** ‖

மாட்டாதே ஆகிலும் ⋆
இம்மலர் தலை மா ஞாலம் ⋆
நின் மாட்டாய மலர் புரையும் ⋆
திரு உருவம் மனம் வைக்க ⋆
மாட்டாத பல சமய ⋆
மதி கொடுத்தாய் ⋆

மலர்த் துழாய் மாட்டே நீ மனம் வைத்தாய் ⋆
மா ஞாலம் வருந்தாதே ‖ **3.1.4** ‖

வருந்தாத அருந் தவத்த ⋆
மலர் கதிரின் சுடர் உடம்பாய் ⋆
வருந்தாத ஞானமாய் ⋆
வரம்பின்றி முழுதியன்றாய் ⋆
வருங்காலம் நிகழ் காலம் ⋆
கழி காலமாய் ⋆
உலகை ஒருங்காக அளிப்பாய் சீர் ⋆
எங்குலக்க ஓதுவனே ‖ **3.1.5** ‖

ஓதுவார் ஓத்தெல்லாம் ⋆
எவ்வுலகத்தெவ்வெவையும் ⋆
சாதுவாய் நின் புகழின் ⋆
தகை அல்லால் பிறிதில்லை ⋆
போது வாழ் புனந் துழாய் ⋆
முடியினாய் ⋆
பூவின் மேல் மாது வாழ் மார்பினாய் ! ⋆
என் சொல்லி யான் வாழ்த்துவனே ‖ **3.1.6** ‖

வாழ்த்துவார் பலராக ⋆
நின் உள்ளே நான்முகனை ⋆
மூழ்த்த நீர் உலகெல்லாம் ⋆
படை என்று முதல் படைத்தாய் ⋆
கேழ்த்த சீர் அரன் முதலாக் ⋆
கிளர் தெய்வமாய்க் கிளர்ந்து ⋆

சூழ்த்தமரர் துதித்தால் ⋆
உன் தொல் புகழ் மாசூணாதே ‖ **3.1.7** ‖

மாசூணாச் சுடர் உடம்பாய் ⋆
மலராது குவியாது ⋆
மாசூணா ஞானமாய் ⋆
முழுதுமாய் முழுதியன்றாய் ⋆
மாசூணா வான் கோலத்து ⋆
அமரர் கோன் வழிப்பட்டால் ⋆
மாசூணா உன பாத ⋆
மலர்ச் சோதி மழுங்காதே ‖ **3.1.8** ‖

மழுங்காத வைந் நுதிய ⋆
சக்கரநல் வலத்தையாய் ⋆
தொழுங்காதல் களிறளிப்பான் ⋆
புள் ஊர்ந்து தோன்றினையே ⋆
மழுங்காத ஞானமே ⋆
படையாக ⋆
மலர் உலகில் தொழும்பாயார்க்களித்தால் ⋆
உன் சுடர்ச் சோதி மறையாதே ‖ **3.1.9** ‖

மறை ஆய நால் வேதத்துள் நின்ற ⋆
மலர்ச் சுடரே ⋆
முறையால் இவ்வுலகெல்லாம் ⋆
படைத்திடந்துண்டுமிழ்ந்தளந்தாய் ⋆
பிறை ஏறு சடையானும் ⋆
நான்முகனும் இந்திரனும் ⋆

இறை ஆதல் அறிந்தேத்த ⋆
வீற்றிருத்தல் இது வியப்பே ‖ **3.1.10** ‖

‡ வியப்பாய வியப்பில்லா ⋆
மெய்ஞ்ஞான வேதியனை ⋆
சயப் புகழார் பலர் வாழும் ⋆
தடங்குருகூர்ச் சடகோபன் ⋆
துயக்கின்றித் தொழுதுரைத்த ⋆
ஆயிரத்துள் இப்பத்தும் ⋆
உயக்கொண்டு பிறப்பறுக்கும் ⋆
ஒலி முந்நீர் ஞாலத்தே ‖ **3.1.11** ‖

## திருவாய்மொழி – முந்நீர் ஞாலம்

‡ முந்நீர் ஞாலம் படைத்த ⋆
எம் முகில் வண்ணனே ! ⋆
அந்நாள் நீ தந்த ⋆
ஆக்கையின் வழி உழல்வேன் ⋆
வெந்நாள் நோய் வீய ⋆
வினைகளை வேர் அறப் பாய்ந்து ⋆
எந்நாள் யான் உன்னை ⋆
இனி வந்து கூடுவனே ‖ **3.2.1** ‖

வன் மா வையம் அளந்த ⋆
எம் வாமனா ⋆
நின் பன் மா மாயப் ⋆
பல் பிறவியில் படிகின்ற யான் ⋆
தொன் மா வல்வினைத் ⋆
தொடர்களை முதல் அரிந்து ⋆

நின் மா தாள் சேர்ந்து ⋆
நிற்பதெஞ்ஞான்று கொலோ ॥ **3.2.2** ॥

கொல்லா மாக்கோல் ⋆
கொலை செய்து பாரதப் போர் ⋆
எல்லாச் சேனையும் ⋆
இரு நிலத்தவித்த எந்தாய் ⋆
பொல்லா வாக்கையின் ⋆
புணர்வினை அறுக்கல் அறா ⋆
சொல்லாய் யான் உன்னைச் ⋆
சார்வதோர் சூழ்ச்சியே ॥ **3.2.3** ॥

சூழ்ச்சி ஞானச் ⋆
சுடர் ஒளி ஆகி ⋆
என்றும் ஏழ்ச்சிக் கேடின்றி ⋆
எங்கணும் நிறைந்த எந்தாய் ⋆
தாழ்ச்சி மற்றெங்கும் தவிர்ந்து ⋆
நின் தாள் இணைக் கீழ் வாழ்ச்சி ⋆
யான் சேரும் வகை ⋆
அருளாய் வந்தே ॥ **3.2.4** ॥

வந்தாய் போலே ⋆
வந்தும் என் மனத்தினை நீ ⋆
சிந்தாமல் செய்யாய் ⋆
இதுவே இதுவாகில் ⋆
கொந்தார் காயாவின் ⋆
கொழு மலர்த் திரு நிறத்த எந்தாய் ⋆

யான் உன்னை ⋆
எங்கு வந்தணுகிற்பனே ‖ **3.2.5** ‖

கிற்பன் கில்லேன் ⋆
என்றிலன் முன நாளால் ⋆
அற்ப சாரங்கள் அவை ⋆
சுவைத் தகன்றொழிந்தேன் ⋆
பற்பல் ஆயிரம் ⋆
உயிர் செய்த பரமா ⋆
நின் நற் பொற் சோதித்தாள் ⋆
நணுகுவதெஞ் ஞான்றே ‖ **3.2.6** ‖

எஞ்ஞான்று நாம் ⋆
இருந்திருந்திரங்கி நெஞ்சே ! ⋆
மெய்ஞ் ஞானம் இன்றி ⋆
வினையியல் பிறப்பழுந்தி ⋆
எஞ்ஞான்றும் எங்கும் ⋆
ஒழிவற நிறைந்து நின்ற ⋆
மெய்ஞ் ஞானச் சோதிக் ⋆
கண்ணனை மேவுதுமே ‖ **3.2.7** ‖

மேவு துன்ப வினைகளை ⋆
விடுத்துமிலேன் ⋆
ஓவுதல் இன்றி ⋆
உன் கழல் வணங்கிற்றிலேன் ⋆
பாவு தொல் சீர்க் கண்ணா ! ⋆
என் பரஞ்சுடரே ⋆

கூவுகின்றேன் காண்பான் ⋆
எங்கெய்தக் கூவுவனே ॥ **3.2.8** ॥

கூவிக் கூவிக் ⋆
கொடு வினைத் தூற்றுள் நின்று ⋆
பாவியேன் பல காலம் ⋆
வழி திகைத்தலமர்கின்றேன் ⋆
மேவி அன்றா நிரை காத்தவன் ⋆
உலகம் எல்லாம் ⋆
தாவிய அம்மானை ⋆
எங்கினித் தலைப்பெய்வனே ॥ **3.2.9** ॥

தலைப்பெய் காலம் ⋆
நமன் தமர் பாசம் விட்டால் ⋆
அலைப்பூண் உண்ணும் ⋆
அவ்வல்லல் எல்லாம் அகல ⋆
கலைப்பல் ஞானத்து ⋆
என் கண்ணனைக் கண்டு கொண்டு ⋆
நிலைப்பெற்றென் நெஞ்சம் பெற்றது ⋆
நீடுயிரே ॥ **3.2.10** ॥

‡ உயிர்கள் எல்லா ⋆
உலகமும் உடையவனை ⋆
குயில் கொள் சோலைத் ⋆
தென் குருகூர்ச் சடகோபன் ⋆
செயிரில் சொல் இசை மாலை ⋆
ஆயிரத்துள் இப்பத்தும் ⋆

உயிரின்மேல் ஆக்கை ⋆
ஊனிடை ஒழிவிக்குமே ॥ **3.2.11** ॥

## திருவாய்மொழி – செஞ்சொற்கவிகாள்

‡ செஞ்சொற் கவிகாள் ! உயிர் காத்தாட்செய்ம்மின் ⋆
திருமாலிருஞ்சோலை ⋆
வஞ்சக் கள்வன் மா மாயன் ⋆
மாயக் கவியாய் வந்து ⋆
என் நெஞ்சும் உயிரும் உள் கலந்து ⋆
நின்றார் அறியா வண்ணம் ⋆
என் நெஞ்சும் உயிரும் அவை உண்டு ⋆
தானே ஆகி நிறைந்தானே ॥ **10.7.1** ॥

தானே ஆகி நிறைந்து ⋆
எல்லா உலகும் உயிரும் தானேயாய் ⋆
தானே யான் என்பான் ஆகித் ⋆
தன்னைத் தானே துதித்து ⋆
எனக்குத் தேனே பாலே கன்னலே அமுதே ⋆
திருமாலிருஞ்சோலை ⋆
கோனே ஆகி நின்றொழிந்தான் ⋆
என்னை முற்றும் உயிர் உண்டே ॥ **10.7.2** ॥

என்னை முற்றும் உயிர் உண்டு ⋆
என் மாய ஆக்கை இதனுள் புக்கு ⋆
என்னை முற்றும் தானேயாய் ⋆
நின்ற மாய அம்மான் சேர் ⋆
தென்னன் திருமாலிருஞ்சோலைத் ⋆
திசை கை கூப்பிச் சேர்ந்த யான் ⋆

இன்னும் போவேனே கொலோ ! ⋆
என் கொல் அம்மான் திரு அருளே ॥ **10.7.3** ॥

என் கொல் அம்மான் திரு அருள்கள் ⋆
உலகும் உயிரும் தானேயாய் ⋆
நன்கென் உடலம் கை விடான் ⋆
ஞாலத்தூடே நடந்துழக்கி ⋆
தென் கொள் திசைக்குத் திலதமாய் நின்ற ⋆
திருமாலிருஞ்சோலை ⋆
நங்கள் குன்றம் கை விடான் ⋆
நண்ணா அசுரர் நலியவே ॥ **10.7.4** ॥

நண்ணா அசுரர் நலிவெய்த ⋆
நல்ல அமரர் பொலிவெய்த ⋆
எண்ணாதனகள் எண்ணும் ⋆
நன் முனிவர் இன்பம் தலை சிறப்ப ⋆
பண் ஆர் பாடல் இன் கவிகள் ⋆
யானாய்த் தன்னைத் தான் பாடி ⋆
தென்னா என்னும் என் அம்மான் ⋆
திருமாலிருஞ்சோலை யானே ॥ **10.7.5** ॥

திருமாலிருஞ்சோலை யானே ஆகிச் ⋆
செழு மூ உலகும் ⋆
தன் ஒருமா வயிற்றின் உள்ளே வைத்து ⋆
ஊழி ஊழி தலை அளிக்கும் ⋆
திருமால் என்னை ஆளு மால் ⋆
சிவனும் பிரமனும் காணாது ⋆

அருமால் எய்தி அடி பரவ ⋆
அருளை ஈந்த அம்மானே ‖ **10.7.6** ‖

அருளை ஈ என் அம்மானே ! என்னும் ⋆
முக்கண் அம்மானும் ⋆
தெருள் கொள் பிரமன் அம்மானும் ⋆
தேவர் கோனும் தேவரும் ⋆
இருள்கள் கடியும் முனிவரும் ⋆
ஏத்தும் அம்மான் திருமலை ⋆
மருள்கள் கடியும் மணி மலை ⋆
திருமாலிருஞ்சோலை மலையே ‖ **10.7.7** ‖

‡ திருமாலிருஞ்சோலை மலையே ⋆
திருப்பாற்கடலே என் தலையே ⋆
திருமால் வைகுந்தமே ⋆
தண் திருவேங்கடமே எனதுடலே ⋆
அரு மா மாயத்தெனதுயிரே ⋆
மனமே வாக்கே கருமமே ⋆
ஒரு மா நொடியும் பிரியான் ⋆
என் ஊழி முதல்வன் ஒருவனே ‖ **10.7.8** ‖

ஊழி முதல்வன் ஒருவனே என்னும் ⋆
ஒருவன் உலகெல்லாம் ⋆
ஊழிதோறும் தன் உள்ளே படைத்து ⋆
காத்துக் கெடுத்துழலும் ⋆
ஆழி வண்ணன் என் அம்மான் ⋆
அந்தண் திருமாலிருஞ்சோலை ⋆

வாழி மனமே கை விடேல் ⋆
உடலும் உயிரும் மங்க ஒட்டே ॥ **10.7.9** ॥

மங்க ஒட்டுன் மா மாயை ⋆
திருமாலிருஞ்சோலை மேய ⋆
நங்கள் கோனே ! யானே நீ ஆகி ⋆
என்னை அளித்தானே ⋆
பொங்கைம் புலனும் பொறி ஐந்தும் ⋆
கருமேந்திரியம் ஐம்பூதம் ⋆
இங்கிவ்வுயிர் ஏய் பிரகிருதி ⋆
மானாங்கார மனங்களே ॥ **10.7.10** ॥

‡ மானாங்கார மனம் கெட ⋆
ஐவர் வன் கையர் மங்க ⋆
தானாங்காரம் ஆய்ப் புக்குத் ⋆
தானே தானே ஆனானைத் ⋆
தேனாங்காரப் பொழில் குருகூர் ⋆
சடகோபன் சொல் ஆயிரத்துள் ⋆
மானாங்காரத்திவை பத்தும் ⋆
திருமாலிருஞ்சோலை மலைக்கே ॥ **10.7.11** ॥

## திருவாய்மொழி – திருமாலிருஞ்சோலைமலை

‡ திருமாலிருஞ்சோலை மலை ⋆
என்றேன் என்ன ⋆
திருமால் வந்து ⋆
என் நெஞ்சு நிறையப் புகுந்தான் ⋆
குரு மா மணி உந்து புனல் ⋆
பொன்னித் தென்பால் ⋆

திருமால் சென்று சேர்விடம் ⋆
தென் திருப்பேரே ॥ **10.8.1** ॥

திருப்பேர் நகரான் ⋆
திருமாலிருஞ்சோலைப் ⋆
பொருப்பே உறைகின்ற பிரான் ⋆
இன்று வந்து ⋆
இருப்பேன் என்று ⋆
என் நெஞ்சு நிறையப் புகுந்தான் ⋆
விருப்பே பெற்று ⋆
அமுதம் உண்டு களித்தேனே ॥ **10.8.6** ॥

### பூதத்தாழ்வார் அருளிச்செய்த – இரண்டாம் திருவந்தாதி

பயின்றதரங்கம் திருக்கோட்டி ⋆
பன்னாள் பயின்றதுவும் ⋆
வேங்கடமே பன்னாள் ⋆
பயின்றதணி திகழும் சோலை ⋆
அணி நீர் மலையே ⋆
மணி திகழும் வண் தடக்கை மால் ॥ **46** ॥

உணர்ந்தாய் மறை நான்கும் ⋆
ஓதினாய் நீதி ⋆
மணந்தாய் மலர்மகள் தோள் மாலே ! ⋆
மணந்தாய் போய் வேய் இரும் சாரல் ⋆
வியல் இரு ஞாலம் சூழ் ⋆
மா இருஞ்சோலை மலை ॥ **48** ॥

வெற்பென்றிருஞ்சோலை ⋆

வேங்கடம் என்றிவ்விரண்டும் ⋆
நிற்பென்று நீ மதிக்கும் நீர்மை போல் ⋆
நிற்பென்று உளம் கோயில் ⋆
உள்ளம் வைத்துள்ளினேன் ⋆
வெள்ளத்திளங்கோயில் கைவிடேல் என்று ‖ **54** ‖

## பேயாழ்வார் அருளிச்செய்த – மூன்றாம் திருவந்தாதி

‡ பண்டெல்லாம் வேங்கடம் ⋆
பாற்கடல் வைகுந்தம் ⋆
கொண்டங்குறைவார்க்குக் கோயில் போல் ⋆
வண்டு வளம் கிளரும் நீள் சோலை ⋆
வண் பூங்கடிகை ⋆
இளங்குமரன் தன் விண்ணகர் ‖ **61** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – சிறிய திருமடல்

கணமங்கை
காரார் மணி நிறக் கண்ணனூர் விண்ணகரம் ⋆
சீரார் கண புரம் சேறை திருவழுந்தூர் ⋆
காரார் குடந்தை கடிகை கடல் மல்லை ⋆
ஏரார் பொழில் சூழ் இடவெந்தை நீர்மலை ⋆
சீராரும் மாலிரும் சோலை திருமோகூர் ‖ **37** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – பெரிய திருமடல்

மின்னி மழை தவழும் வேங்கடத்தெம் வித்தகனை ⋆
மன்னனை மாலிருஞ்சோலை மணாளனை ⋆
கொல் நவிலும் ஆழிப் படையானை ‖ **68** ‖

திரு சுந்தரவல்லி சமேத திருவழகர் திருவடிகளே சரணம்